# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2026/24 - 2017 ජූලි මස 04 වැනි අඟහරුවාදා - 2017.07.04

2026/24 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/ST/LND/1/ ACQUI/ 1/7/93.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2014/pc/26.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், சொரணா தொட்ட பிரதேச செயலாளர் பிரிவில், சொரணா தொட்ட கோரளையில் உடஎலேகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இறுதிக் கிராம வரைபட இல. 88, பிற்சேர்க்கை 40 இல் குறிக்கப்பட்டுள்ள சுமார் 0.6359 ஹெக்டயார் அளவுள்ள கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ள காணித்துண்டு.

1. **துண்டு இல. 431**
காணியின் பெயர்: ரிதீபானவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், நிலையான கட்டிடம் அமைக்கப்பட் டுள்ளது; உரிமை கோருபவர்: காணி மறுசீரமைப்பு அதிகார சபை; விஸ்தீரணம்: 0.5426 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 432**
காணியின் பெயர்: ரிதீபானவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், நிலையான கட்டிடம் அமைக்கப்பட் டுள்ளது; உரிமை கோருபவர்: காணி மறுசீரமைப்பு அதிகார சபை; விஸ்தீரணம்: 0.0755 ஹெக்டயார்.

3. **துண்டு இல. 433**
காணியின் பெயர்: ரிதீபானவத்த; விபரம்: பிரவேசிக்கும் வீதி; உரிமை கோருபவர்: காணி மறு சீரமைப்பு அதிகார சபை; விஸ்தீரணம்: 0.0178 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக

2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு, சொரணாதொட்ட பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். நந்தசேன,
பிரதேச செயலாளர்,
சொரணாதொட்ட.

பிரதேச செயலகம்,
சொரணாதொட்ட,
2017, யூன் 28.

7 - 562